**THE LABOUR COURT, SALEM**
**C.P.No. 46 of 2022**

**<u>21.07.2023</u>**

**RW1 – பழனி மீண்டும் வரவழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

Ex.P5 எங்களது கடிதத்தின் அடிப்படையில் எங்களது தொழிலாளி சந்திரனுக்கு கொடுக்கவேண்டிய 4 தலைப்புகளில் ஒப்புக்கொண்டுள்ளோம், அந்த தொகையை இதுவரை நாங்கள் செலுத்தவில்லை. அதில் 76 நாட்கள் ஈட்டிய விடுப்பு காண்பித்துள்ளோம்,. அதில் அதற்கான தொகையை குறிப்பிடவில்லை. மேற்படி கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள தொகையின் அடிப்படையில் கணக்கிட்டு மனுவில் வரிசை எண்.2 முதல் 5 வரை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். EX.R2 அடிப்படையில் 2 தொழிலாளிகள் கடன் சங்கத்திற்கு எழுதி கொடுக்கப்பட்ட பத்திரம் ஆகும். அதில் எதிர்மனுதாரர் சங்கம் என்ற பணத்தை அவர்கள் சம்பளத்திலிருந்து பிடித்து கொடுப்பதாக குறிப்பிடவில்லை அதில் நாங்கள் எந்த கையொப்பமும் போடவில்லை. அந்த ஆவணத்தில் 2 வது கையொப்பம் போட்டவர் பெயர் தேவேந்திரன். அவர் எனது தொழிலாளி ஆவார். கடன் சங்கம் தேவேந்திரன் மூலம் அந்த கடன் தொகையை வசூலுத்திவிட்டார்கள். சங்க கடன் சம்பந்தமாக எ.ம.சா.4 பணிப்பதிவேட்டில் எந்த ஒரு குறிப்பும் இல்லை.Ex.R5 Special பைலாபவில் கூட்டுறவுத்துறை அதிகாரியின் கையொப்பமோ அல்லது சான்றளிக்கப்பட்டதற்கான கைொயாப்பம் எதுவும் இல்லை. அந்த ஆவணம் ஒரு போலியான ஆவணம் என்றால் சரியல்ல. நான் ஒப்புக்கொண்ட தொகையை இதுவரை கொடுக்காததால் மனுவில்

கோரியுள்ளவாறு அதற்கு வட்டி கொடுக்கவேண்டும் என்றால் அதை நான் மறுக்கிறேன். தொழில் தகராறு சட்டம் பிரிவு 33 சி2 ல் என்ன சொல்லப்பட்டது என்று எனக்கு தெரியாது. எனது சர்க்கரை ஆலை கூட்டுறவுத்துறையால் நிர்ணயிக்க்கூடிய ஆலை ஆகும். கூட்டுறவுத்துறை சுற்றறிக்கையின் படி ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்தால் குடும்ப பாதுகாப்பு நிதி இறந்த நேரத்தில் ரூ1 இலட்சம் கொடுக்கவேண்டும் என்றால் அவவாறு எதுவும் இல்லை. சர்க்கரை ஆலையில் பணிசெய்யும்தொழிலாளிக்கு தனியாக சம்பள வாரியம் தரும் சம்பளம் மற்றும் சலுகைகளை சம்பள ஒப்பந்தப்படி கொடுக்கிறோம். அந்த ஒப்பந்தத்தில் பணியாற்றும் தொழிலாளி பணிக்காலத்தில் இறந்தால் குடும்ப பாதுகாப்பு நிதி கொடுக்கவேண்டும் என்றால் அவ்வாறு இல்லை. அந்த சபதத்தை நான் படித்துப்பார்த்துள்ளேன். இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்க மேலாண்மை இயக்குநர் அதிகாரம் கொடுத்துள்ளார். EX.P5 ஆவணத்தில் அவர் கையெழுத்தும் போட்டுள்ளார். அந்த ஆவணத்திற்கு எதிராக நான் சாட்சியம் அளிக்க இயலுமா என்றால் இல்லை. ஆனால் என் பதிலுரை சாட்சியத்தில் மனுதாரருக்கு எந்தவொரு தொகையும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொல்லியுள்ளேன். இது அதிகாரத்திற்கு மீறிய செயல் என்றும், நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

Sd/ (Dr.P. Murugan)
Presiding Officer,
Labour Court, Salem.